30

# மனித இக்கட்டு

## (7:14)

இந்தப் பாடமும் இதற்கு அடுத்த பாடமும் ரோமர் 7:14-25ஐ எடுத்துரைத்து முடிக்கும். இவ்விரு பாடங்களையும் நாம் தொடங்குவதற்கு முன்பு, நீங்கள் இவ்வசனங்களை வாசிக்க நேரம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ... நீங்கள் அதைச் செய்தீர்களா?[1] நீங்கள் அதைச் செய்திருந்தால், இவ்வசனப்பகுதி பற்றிய உங்கள் மனப்பதிவு என்னவாக இருந்தது? உங்களுக்கு என்ன செய்தியைக் கொண்டிருக்கிறது? ... நீங்கள் மனச்சாட்சியின்படி தேவ னுக்கு ஊழியம் செய்ய முயற்சி செய்து கொண்டிருந்தால், உங்கள் பதிலுரை பின்வருவதுபோன்று இருக்கும்: "பவுல் எவ்விதமாக உணர்ந்தார் என்பதை நான் மிகச்சரியாக அறிகிறேன்! நானும் அவ்விதமாகவே உணர்ந்திருக்கிறேன்!"

கல்விப்புலமையற்ற பெரும்பான்மையானவர்கள் ரோமர் 7:14-25 வசனப் பகுதியை எளிமையானதும் நேரடியான கூற்றுள்ளதுமாகக் காணுகின்றனர் என்பது இவ்வசனப்பகுதியைப் பற்றிய ஆர்வத்திற்குரிய ஒரு விஷயமாக உள்ளது. பவுலின் சில சொல்லாக்கங்கள் அவர்களைத் திகைக்கச் செய்யலாம், ஆனால் அப்போஸ்தலர் பின்வருமாறு எழுதியபோது, அவரது சலிப்பை அவர்கள் அடையாளம் காண்கின்றனர்,

> ... நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். ... நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். ...
> நிர்ப்பந்தமான மனுஷன் நான்! (வசனங்கள் 15ஆ-24அ).

ஆகையால், கல்வியாளர்கள் மத்தியில் ரோமர் 7:1-25 வசனப்பகுதி யானது, "ரோமருக்கு எழுதிய நிருபத்திலேயே மிகவும் விவாதத்திற்குரிய பகுதிகளில் ஒன்றாக உள்ளது"[2] என்று அறிவது உங்களைத் திகைப்படையச் செய்யலாம். J. W. மெக்கார்மேன் என்பவர் இதை, "இந்த நிருபத்திலேயே விளக்கியுரைக்க மிகவும் கடினமான வசனப்பகுதி" என்று அழைத்தார்.[3] R. C. பெல் என்பவர், ரோமர் 7ம் அதிகாரம் "இந்தப் புத்தகத்தின் பிரச்சனையான அதிகாரம் என்று அழைக்கப்பட்டுள்ளது" என்று உற்றுநோக்கியுள்ளார்.[4] ஜேம்ஸ் எட்வர்டு என்பவர், "ரோமருக்கு எழுதிய நிருபத்தில் வேறு எந்த இடத்திலும் விளக்கவுரையாளர்களின் காய்ச்சல்கள் உயர்ந்த சுதியை அடைவதில்லை" என்று எழுதினார்.[5]

இவ்வசனப்பகுதியைச் சுற்றிலும் இவ்வளவு வாத எதிர்வாதங்கள் சூழ்ந் திருப்பதால், இந்தப்பாடத்தில் நான் இவ்வசனப்பகுதியை அறிமுகம் மாத்திரம் செய்து இதற்குள்ளாக இருக்கும் பிரச்சனையைப் பிரதானமாகக் கையாளுவேன்.

*அடுத்த பாடத்தில் நாம் 7:14-25 வரையிலான பகுதியைப் பற்றிய நமது படிப்பை முடிப்போம்.*

## பிரச்சனை விளக்கப்பட்டது

**பிரதானமான வாத எதிர்வாதம்**

இந்த ஆரவாரம் யாவும் எதைப்பற்றியது? முந்திய பாடத்தில் குறிப்பிட்டபடி, 7:14-25ல் "நான்" என்பதினால் பவுல் அர்த்தப்படுத்தியதைப் பற்றியே வாத எதிர்வாதத்தின் பெரும்பான்மையான பகுதி மையங்கொண்டுள்ளது. அவர் தமது சொந்த அனுபவங்களைக் குறிப்பிட்டாரா அல்லது தமது கருத்தை நிலைநாட்டுவதற்கு "இந்த போதனைகளைத் தமக்குத்தாமே உருவகநடையில் பயன்படுத்திக்கொண்ட செயலை" மாத்திரம் நடப்பித்தாரா (1 கொரிந்தியர் 4:6ஐக் காணவும்)? முந்தியபாடத்தில், பவுல் தம்மைக் குறித்தே பேசினார் என்பதே எனது முடிவாக இருந்தது - ஆனால் அவரைப் பொறுத்தமட்டில் உண்மையாக உள்ள விஷயம் எதுவோ, அது மற்றவர்களைப் பொறுத்தமட்டிலும் எப்போதும் உண்மையாகவே இருந்துள்ளது. பவுல் ஒருவர் கிறிஸ்தவராவதற்கு *முன்பிருந்த நிலையையா* அல்லது ஒருவர் கிறிஸ்தவரான *பின்பிருந்த நிலையையா,* எதைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பது வாத எதிர்வாதத்தின் இன்னொரு அம்சமாக உள்ளது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டுகளில், பெரும்பான்மையான கிறிஸ்தவ எழுத்தாளர்கள், பவுல் கிறிஸ்தவத்திற்கு முற்பட்ட ஒரு நிலையைப் பற்றிப் பேசினார் என்று நம்பினர். பின்பு, அகுஸ்தீன் என்பவர் தொடங்கி, இவ்வசனப்பகுதியானது பக்குவப்பட்ட கிறிஸ்தவர்களால்கூட அனுபவிக்கப்படும் உள்ளான போராட்டத்தை விவரிக்கிறது என்ற கண்ணோட்டம் பிரபலமாயிற்று. இன்றைய நாட்களில், இவ்விரு அணுகுமுறையின்மீதும் எண்ணற்ற வேறுபாடுகள் - இவற்றைப் போதிப்பவர்களால் தீவிரமாக தற்காக்கப்படும் வேறுபாடுகள் - நிலவுகின்றன. ரிச்சர்ட் ரோஜர்ஸ் என்பவர், "நல்ல மற்றும் மாபெரும் மனிதர்கள் இந்தக் கேள்வியின் இருபுறத்திலும் நிற்கின்றனர் மற்றும் நின்றுள்ளனர், மேலும் நல்ல கிறிஸ்தவ மனிதர்கள் ஒரு வசனப்பகுதியில் கருத்து வேறுபடும்போது, நாம் மிகவும் உபதேசரீதியானவர்களாவதற்கு அது உகந்த நேரமல்ல" என்று எச்சரித்தார்.[6]

ரோமர் 7க்கான பல அணுகுமுறைகளைப் பட்டியலிடுவதற்கும் அவை ஒவ்வொன்றிற்காகவும் அதற்கு எதிரான விவாதங்களைக் கொடுப்பதற்கும் இங்கு நான் பெற்றுள்ள நேரம் மற்றும் இடத்தைக் காட்டிலும் அதிகமானவை தேவைப்படும். இருப்பினும், ஒரு சில குறிப்புகள் இங்கு கூறத்தக்கவைகளாக உள்ளன.

பவுல் தமது சிந்தையில், மனமாற்றத்திற்குப் பிந்திய சூழ்நிலையைக் கொண்டிருந்தார் என்று நம்புகிறவர்கள், 14ம் வசனமானது முந்திய வசனங்களின் *கடந்தகால* வினைச்சொல்லிலிருந்து ("பாவமானது என்னை வஞ்சித்து ..."; வசனம் 11) *நிகழ்கால* வினைச்சொல்லிற்கு ("நான் ... செய்கிறேன்"; வசனம் 19) மாறுபடுவதைக் குறிப்பிடுகின்றனர். அப்போஸ்தலர் நிகழ்காலத்தில் தம்மைக் குறித்துப் பேசியிருக்க வேண்டும் - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், தாம் ஒரு கிறிஸ்தவர் என்ற வகையில் அவர் தம்மைப்பற்றிப் பேசினார் -

என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். கடந்தகாலத்தில் நடந்தவைகள் பற்றிப் பேசுகையில், மக்கள் சிலவேளைகளில் அவை நிகழ்காலத்தில் நடப்பது போலப் பேசுகின்றனர் என்பதால், இது ஒரு முடிவான விவாதமாக இருப்பதில்லை (மத்தேயு 17:11ஐயும் 17:12ஐயும் ஒப்பிடவும்). ஆங்கிலமொழியில் இது "வரலாற்று நிகழ்காலம்" என்று அழைக்கப்படுகிறது.[7]

பவுல் தாம் ஒரு கிறிஸ்தவராவதற்கு *முந்திய* தமது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார் என்பதே எனது கருத்தாக உள்ளது. நமது வேதவசனப்பகுதியில் பவுல், தாம் "பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு" இருந்ததாகக் கூறினார் (ரோமர் 7:14); ஆனால் அதற்கு முன்பு அவர் தாம் ஒரு கிறிஸ்தவரானபோது, "பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாக" கூறினார் (6:7; வசனம் 14ஐக் காணவும்). மீண்டும், பவுல் "பாவப்பிரமாணத்திற்குச் சிறையாக்கப்பட்டிருத்தல்" பற்றிப் பேசினார் (7:23); ஆனால் அடுத்த அதிகாரத்தில் அவர், *கிறிஸ்துவுக்குள்* இருக்கிறவர்கள் "பாவபிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டுள்ளனர்" என்று வலியுறுத்தினார் (8:2).

ரோமர் 7ல் பவுலினால் சித்தரிக்கப்பட்டுள்ள உள்ளான போராட்டமானது, அவர் ஒரு கிறிஸ்தவர் ஆவதற்கு முன்பு கொண்டிருந்த யூதத்துவ மனநிலை பற்றிய அவரது மற்ற கூற்றுகளுக்கு நேர்மாறாக உள்ளது என்பது, மனமாற்றத்திற்கு முந்தியநிலை பற்றிப்பவுல் பேசுகிறார் என்ற நிலைப்பாட்டிற்கு ஒரு மறுப்புரையாக உள்ளது. அவர் தமது யூதப்பின்னணி பற்றிப் பேசுகையில் பிலிப்பியர் 3:6ஆ வில் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தம்மைப் பற்றி விவரித்தார்: "நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்." நடபடிகள் 23:1ல் யூதசங்கத்தாரிடம் பவுல், "சகோதரரே, இந்நாள்வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்துவந்தேன்" என்று கூறினார்.

ஒருவேளை கருத்து வேறுபாடு என்பது உண்மையிலிருப்பதைக் காட்டிலும் அதிகமாகக் கற்பனை செய்யப்பட்டிருக்கலாம். பிலிப்பியர் வசனப்பகுதியில், பவுல் தாம் பரிபூரணத்துவம் உடையவராக இருந்ததாக உரிமைகோரவில்லை. அவர் தாம் மோசேயின் சடங்கு அல்லது சடங்காச்சாரம் எதையாவது நிகழ்த்தத் தவறியிருந்ததாக எவரொருவரும் சுட்டிக்காண்பிக்க முடியாது என்று மாத்திரம் கூறினார். அதுபோலவே, "நல்மனச்சாட்சி" கூற்றைப் பொறுத்தமட்டில், பவுல் தாம் ஒருபோதும் தவறு செய்ததில்லை என்றோ அல்லது ஒருபோதும் குற்ற உணர்வு கொண்டிருந்ததில்லை என்றோ வலியுறுத்தவில்லை. மாறாக, அவர் தமது மனச்சாட்சி கட்டளையிடுகின்றவற்றைப் பின்பற்றத் தம்மால் இயன்ற அளவு சிறப்பாகவே எப்போதும் செயல்பட்டிருந்ததாக அறிவித்தார்.

ரோமர் 7:14-25ல் பவுல் சித்தரித்துள்ள உள்ளான வலிவார்ந்த போராட்ட வகைக்கான குறிப்பு புதிய ஏற்பாட்டின் வேறு எவ்விடத்திலும்கூட இருப்பதில்லை.[8] ஒருவேளை நாம் இவ்வசனப்பகுதியை, பவுலின் உணர்வுகள் பற்றிக் கூடுதலான உட்கண்ணோட்டத்தை - வேதவசனங்களில் இங்கு மாத்திரம் காணப்படுகிற உட்கண்ணோட்டத்தை - அளிப்பதாகக் கண்ணோக்க வேண்டியதாக இருக்கலாம். ஒருவேளை பவுல், இயேசுவை எதிர்கொள்வதற்கு முன்னர் தாம் அடக்கி வைத்திருந்த உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கலாம். (தமஸ்கு நகரில் வேதனையான மூன்று நாட்களின்போது பவுலின் சிந்தையில் பெருகக்கெடுத்த இதைப்போன்ற சிந்தனைகளை [நடபடிகள் 9:9] கற்பனை

செய்வது கடினமல்ல.) பவுல் ஒருவேளை, தமது நிகழ்காலக் கிறிஸ்தவக் கண்கள் மூலம் தமது கடந்தகால யூதத்துவ வாழ்வைக் கண்ணோக்கியிருக்கலாம். எந்த வகையிலும், பவுல் தமது சுயபலத்தை மாத்திரம் சார்ந்த நிலையில் நியாயப்பிரமாணத்தின் வற்புறுத்துதல்களைச் சந்திக்க முயற்சி செய்ததில் தமக்கு ஏற்பட்ட சலிப்பைக் காண்பித்தலே நமது வேதவசனப்பகுதியின் கண்ணோட்டத்திற்கான அடிப்படைக் கருத்தாக இருந்தது என்று எனக்குக் காணப்படுகிறது.

**மனிதகுலத்தின் நிலை**

அதே வேளையில், கல்வித்துவம் வாய்ந்த ஆழ்ந்த கருத்துகளைக் கடந்து நிற்கும் உலகளாவிய தன்மையொன்றை நான் ரோமர் 7:14-25ல் அடையாளம் காணுகிறேன். இவ்வசனங்களைப் பற்றி J. D. தாமஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> மனித இயல்பைச் சித்தரிப்பதிலும் சோதனையின் செயல்முறையில் உண்மையில் என்ற நடக்கிறது என்பதை விளக்கியுரைப்பதிலும், எந்த ஒரு எழுத்தாளராலும் எழுதப்பட்ட மானிடவியல் மனோதத்துவத்தின் எந்த எழுத்துக்களும் இவ்வசனங்களைக் காட்டிலும் நல்முறையில் அந்தப்பணியைச் செய்வதில்லை. ... பவுல் தம்மைப் பற்றிப் பேசுவதற்கும் தமது கருத்தை விவரிப்பதற்கும் ["நான்" என்பதை] பயன்படுத்துகிறார், ஆனால் இது நம் எல்லாருக்கும் உண்மையாக உள்ளது.[9]

மிகத் தொடக்ககால எழுத்துக்கள் முதல் நிகழ்காலம் வரையிலும், மனித குலத்தின் உள்ளான போராட்டங்கள் குறித்து ஏராளமான சாட்சியங்கள் உள்ளன.[10] உள்ளான போராட்டத்திற்கு மிக உச்சபட்சமான உதாரணம் ஒன்று, இராபர்ட் லூயிஸ் ஸ்டீபன்ஸன் என்பவர் எழுதிய *Dr. Jekyll and Mr. Hyde*[11] என்ற மிகச்சிறந்த கதையில் காணப்படுகிறது. சமீபத்திய மேற்கத்தியத் திரைப்படம் ஒன்றில்,[12] கொள்கைப் பிடிப்பற்ற இந்தியர் ஒருவர், அந்தத் திரைப் படத்தின் கதாநாயகனிடம், "உனக்குள்ளாக இரு நாய்கள் இருக்கின்றன. ஒன்று பொல்லாதது; இன்னொன்று நல்லது. அற்பமான நாய் எல்லா வேளைகளிலும் நல்ல நாயிடம் சண்டையிடுகிறது. ... எது ஜெயிக்கிறது?" என்று அறைகூவல் விடுத்தான். முதலில் கதாநாயகன், "எனக்குத் தெரியாது" என்று பதில் கூறினான்; ஆனால் அவன் பின்பு பின்வரும் முடிவுக்கு வந்தான்: "நான் எந்த நாய்க்கு அதிகம் உணவளிக்கிறேனோ அதுவே ஜெயிக்கிறது."

பவுல் எழுதிய உள்போராட்டம் மேற்கூறப்பட்ட உதாரணத்திற்கு மிகச்சரியாக ஒத்துப்போவது கிடையாது. அந்தப் போராட்டங்கள், *தீமை* செய்ய வேண்டும் என்ற உள்ளான விருப்பம் பற்றியவைகளாக இருக்கையில், பவுலின் போராட்டமானது, *நன்மையை* மாத்திரமே செய்ய வேண்டும் என்று இருதயத்தில் உணரப்பட்ட விருப்பத்திலிருந்து எழுந்ததாகும் - இந்த விருப்பத்தைப் பவுலினால் சீராக நிறைவேற்ற இயலாதிருந்தது. இருந்த போதிலும், பவுலின் உள்ளான போராட்டம், நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த வாழ்விற்கு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த நம்மை அனுமதிக்கப் போதுமான அளவுக்கு மனிதகுலத்தின் உள்ளான போராட்டங்களுக்கு இணையானவைகளாக உள்ளன.

### *அர்த்தம் நிறைந்த விளக்கம்*

*ரோமர் 7:14-25ஐ நமக்குக் கொடுப்பதில் பவுலின் நோக்கம் குறித்த கண்ணோட்டத்தை நாம் இழந்துவிடக்கூடாது. நாம் அவரது சொந்தப் போராட்டங்கள் குறித்துப் பரிதாபப்பட வேண்டும் என்பதோ, அல்லது மனித மனோதத்துவம் பற்றிய உட்கண்ணோட்டத்தை நமக்குத் தர வேண்டும் என்பதோகூடப் பவுலின் குறிக்கோளாக இருக்கவில்லை. அவர் இன்னமும் நியாயப்பிரமாணத்தின் மீதே கவனம் குவித்திருந்தார் (வசனங்கள் 14, 16, 22, 25 ஆகியவற்றைக் காணவும்). 1 முதல் 6 வரையுள்ள வசனங்களில், அவர் மக்கள் "நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டிருந்தனர்" என்பதைக் குறிப்பிட்டிருந்தார் (வசனம் 2). அது நியாயப்பிரமாணம் மோசமானதாக இருந்தது என்று அர்த்தப்படுத்தியதா? இல்லை. 7ம் வசனம் முதல் 13ம் வசனம் வரையில், பவுல் நியாயப்பிரமாணம் தன்னில்தானே நல்லதாகவே இருந்தது, ஆனால் பாவம் (சாத்தான்) தமக்குள் [பவுலுக்குள்] கீழ்ப்படியாமையைத் தூண்ட நியாயப்பிரமாணத்தைப் பயன்படுத்திக்கொண்டான் என்று கூறி நியாயப்பிரமா ணத்தைத் தற்காத்தார். இப்போது, 14 முதல் 25 வரையுள்ள வசனங்களில், பவுல் நியாயப்பிரமாணத்திலுள்ள அடிப்படைப் பிரச்சனையை எடுத்துரைத்து தமது கலந்துரையாடலை முடித்துவைத்தார்: ஒரு நபர் பாவம் செய்தபின்பு, அந்தப் பாவத்தின் குற்றத்தை நீக்க நியாயப்பிரமாணம் பெலனற்றதாக இருந்தது.*

*14 முதல் 25 வரையுள்ள வசனங்கள், நியாயப்பிரமாணத்தின்கீழ் ஒரு நபர் தமது சொந்த பலத்தின் மூலமாக நல்லவராக இருக்கவும் நற்கிரியைகளைச் செய்யவும் முயற்சி செய்தலைச் சித்திரிக்கின்றன. நமது வேதவசனப் பகுதியில் "நான்" என்ற தன்னிலைப் பெயர்ச்சொல் எவ்வளவு அடிக்கடி வருகிறது என்பதைக் கவனியுங்கள். இந்தப் பகுதியானது இதைத் தொடர்ந்து வரும் வசனப்பகுதிக்கு முற்றிலும் எதிரிடையானதாக இருக்கிறது. "நான்" மட்டும் தனியாக என்ன <u>செய்ய இயலாது</u> என்பதை 7ம் அதிகாரம் காண்பிக்கிறது. "நான்" அத்துடன் <u>கூடுதலாகப்</u> பரிசுத்த ஆவியானவரும் சேர்ந்து என்ன <u>செய்ய இயலும்</u> என்று 8ம் அதிகாரம் கூறுகிறது.*

*நமது வேதவசனப்பகுதியிலிருந்து நாம் அதிகம் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டைச் சட்டரீதியாக ஏற்படுத்த முடியுமா? நிச்சயமாகவே முடியும். விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர்கள்கூடச் சில வேளைகளில் தேவன் அளித்துள்ள ஆவிக்குரிய ஆதாரமூலங்களைப் புறக்கணித்துத் தங்கள் சுயபலத்தின்மூலம் நன்மை செய்ய முயற்சிக்கின்றனர். இருப்பினும், நாம் இவ்வசனப்பகுதியை நடைமுறைப்படுத்துகையில் நியாயப்பிரமாணத்தின்மீது பவுல் கவனம் குவித் திருந்தது பற்றிய கண்ணோக்கை இழந்துவிடக்கூடாது.*

## *வசனப்பகுதி ஆராயப்படுகிறது (7:14)*

### *பவுலின் துதி*

*நமது வசனப்பகுதி துவங்குகையில், நியாயப்பிரமாணத்தைத் தற்காத்தல் என்ற தமது செயலைப் பவுல் தொடருவதைக் காணுகிறோம். அவர், "மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது" என்று கூறினார் (வசனம் 14அ). அவரது வாசகர்கள் - எல்லாரும் இல்லையென்றாலும் - பெரும்பான்மையானவர்கள் தாம் கூறுவதை ஒப்புக்கொள்வார்கள் என்று*

*அவர் அறிந்திருந்தபடியால், இங்கு அவர் "நமக்கு" என்ற பன்மைச் சொல்லைப் பயன்படுத்தினார். நியாயப்பிரமாணம் "ஆவிக்குரியது" என்று அர்த்தப்படும் pneumatikos என்பதாக இருந்தது என்று வலியுறுத்தினார். ஜிம்மி ஆலென் என்பவர், நியாயப்பிரமாணமானது பின்வரும் பல வகைகளில் ஆவிக்குரியதாக இருந்தது என்று குறிப்பிட்டார்:*

> *அதன் தோற்றத்தில் - அது தேவனால் தரப்பட்டது (இ.வ. 1 கொரிந்தியர் 10:3-4).*
> *அதன் நோக்கத்தில் - அது மனிதர்களை ஆவிக்குரிய வகையில் மேம்படுத்த நோக்கங்கொண்டிருந்தது.*
> *அதன் உரைத்தலில் - அது மனிதர்களின் ஆவிகளுடன் பேசியது.[13]*

**பவுலின் இக்கட்டான நிலை**

*"நானோ ... மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்" என்று பவுல் கூறினார் (ரோமர் 7:14இ). "மாம்சத்துக்குரிய" என்பது "மாம்சம்" என்பதற்குரிய (sarx என்ற) வார்த்தையிலிருந்து வருகிற sarkinos[14] என்ற வார்த்தையின் மொழி பெயர்ப்பாக உள்ளது. Sarkinos என்பது அடிப்படையில் "மாம்சத்தையுடைய, மாம்சத்தைக் கொண்டுள்ள" என்று அர்த்தப்படுகிறது.[15] KJV வேதாகமத்தில் மாம்சம் என்பதற்குரிய லத்தீன் வார்த்தையிலிருந்து வந்த "carnal" என்ற வார்த்தை உள்ளது, ஆனால் "carnal" என்பது இன்றைய நாட்களில் பொதுவான பயன்பாட்டிலுள்ள வார்த்தையல்ல. NIV வேதாகமத்தில் "unspiritual" என்றுள்ளது, இது "ஆவிக்குரிய" நியாயப்பிரமாணத்திற்கு நேரெதிரானது என்பதை வலியுறுத்துகிறது, ஆனால் sarkinos என்றால் "ஆவிக்குரியதல்லாதது" என்றல்ல, மாறாக "மாம்சத்தால் ஆனது" என்றே அர்த்தமாகிறது. (இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியிலுள்ள வார்த்தைகள் பற்றிய படிப்பில் காணவும்.)*

*பவுல், "நானோ மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்" என்று கூறியபோது, அவர் தாம் எவ்வளவு* பலவீனமாக *இருந்தார் என்பதை வலியுறுத்தினார். இதைத் தொடர்ந்து வரும் வசனங்கள், பாவத்தின் அறைகூவல்களைத் தமது* சொந்தத்தில் *சந்திக்க முயற்சி செய்யும் - மற்றும் பரிதாபத்திற்குரிய வகையில் அதில் தோல்வியடையும் - ஒரு மனிதரை விவரிக்கின்றன. முந்திய பாடத்தில் குறிப்பிடப்பட்டபடி,* நியாயப்பிரமாணம் *பிரச்சனையாக இருந்ததில்லை, மாறாக,* தாமே பிரச்சனையாக *இருந்ததாக இதன் மூலம் பவுல் வலியுறுத்தினார்.*

*பவுல், "நானோ பாவத்துக்குக் கீழாகவிற்கப்பட்டு" (வசனம் 14ஆ) இருந்ததாகக் கூறியதைக் கொண்டு, தமது உதவியற்ற நிலைபற்றிய சுருக்கமான ஆராய்ச்சியை நிறைவுசெய்தார். இங்கு திரும்பவும் பாவம் நபர்த்துவப்படுத்தப்பட்டுள்ள அடிமைச் சந்தையானது உருவகமாக உள்ளது. ஏலம் விடுபவரின் சுத்தியல் வீழ்ந்திருந்தது, பவுல் பாவத்தின் அடிமையாக இருந்தார் (6:6, 17, 20 ஆகிய வசனங்களைக் காணவும்).*

*பவுலினால் நியாயப்பிரமாணத்தைப் பூரணமாகக் கைக்கொள்ள இயலவில்லை என்பதே பிரச்சனையாக இருந்தது. நியாயப்பிரமாணம் பூரணமானதாக இருந்தது, ஆனால் அவர் அவ்வாறு இருக்கவில்லை. வெளிக்கண்ணோக்கு மங்கியிருந்தது. அது எவ்வளவாக மங்கியிருந்தது என்பதை, அடுத்த பாடத்தில்*

வேதபாடவசனம் பற்றிய நமது படிப்பில் நாம் காண்போம்.

## முடிவுரை

*Peanuts* நகைச்சுவைத் துண்டுப்படம் ஒன்றில், சார்லி பிரவுன் என்ற நடிகர், லூசி என்பவரின் "மனோதத்துவ மருத்துவரின் [சிகிச்சை] மேடைக்கு" நடந்து சென்றார். லூசி, "சார்லி பிரவுன் மறுபடியும் ஊக்கமிழந்து போனீர்களா?" என்று கேட்டார். பின்பு அந்தப் பெண்மணி, "நீங்கள் நீங்களாக இருப்பதே உங்களிடமுள்ள இடர்ப்பாடு ஆகும்" என்று கூறினார். அதற்கு சார்லி பிரவுன், "அதைப் பற்றி நான் இந்த உலகத்தில் என்ன செய்ய முடியும்?" என்று பதில் கேள்வி கேட்டார். அதற்கு லூசி, "நான் அறிவுரை கொடுப்பதாக நடிக்கவில்லை; நான் இடர்ப்பாட்டை மாத்திரமே சுட்டிக்காட்டினேன்" என்று கூறினார்.[16] லூசி கூறிய இவ்விஷயம், நியாயப்பிரமாணம் செய்த விஷயத்தைப் போன்றதாக உள்ளது: அது பிரச்சனையைச் சுட்டிக்காண்பித்தது, ஆனால் உண்மையான அல்லது நிரந்தரமான தீர்வை அளிக்கவில்லை.

ரோமர் 7ல் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மீதே பவுலின் வலியுறுத்தமிருந்தது; ஆனால், ஒரு கருத்தில், அவர் நியாயப்பிரமாணத்தைப் பற்றிக் கூறிய விஷயமானது எந்தப் பிரமாணத்தைப் பற்றியும் கூறப்படலாம். நியாயப்பிரமாணம் பிரச்சனையைச் சுட்டிக்காண்பிக்க முடியும். இருப்பினும், நாம் அதன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதிருக்கும் போது, குற்றத்தை நீக்குதல் என்பது அதன் இயல்பாக இருப்பது இல்லை. மாம்ச பலவீனத்தின் காரணமாக, நாம் நியாயப்பிரமாணத்தை - எந்தப் பிரமாணத்தையும் - பூரணமாகக் கைக்கொள்ள இயலாமற்போகலாம். அதனால்தான் நமக்கு கிறிஸ்து மிகவும் அவசியமாக தேவைப்படுகிறார் (7:25அ வைக் காணவும்). கிறிஸ்து இல்லாத நிலையில், நாம் "நிர்ப்பந்தமான மனுஷன்/மனுஷி நான்!" என்று மாத்திரமே கதறக்கூடும் (வசனம் 24அ).

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, அவர்கள் எவ்வாறு "கிறிஸ்துவுக்குள்" வர முடியும் என்பது பற்றிக்கூற நீங்கள் விரும்பலாம் (ரோமர் 6:3-6).

---

குறிப்புகள்

[1]நீங்கள் இந்தப் பாடத்தை வகுப்பறை அமைவு ஒன்றில் பயன்படுத்தினால், ரோமர் 7:14-25 வரையிலுள்ள வசனப்பகுதியை அல்லது குறைந்தபட்சம் திறவுகோல் வசனங்களை உரக்க வாசித்து வகுப்பைத் தொடங்கவும். பின்பு வகுப்பில் உள்ளவர்களிடத்தில் அவ்வசனப்பகுதிபற்றி அவர்களின் பதில்செயல்களைப் பகிர்ந்துகொள்ளும்படி கேளுங்கள். [2]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 233. [3]J. W. MacGorman, "Romans 7 Once More," *Southwestern Journal of Theology* (Fall 1976): 31. [4]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 63. [5]James R. Edwards, *Romans,* New Inter-

national Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1992), 184. [6]Richard Rogers, *Paid in Full: A Commentary on Romans* (Lubbock, Tex.: Sunset Institute Press, 2002), 103. [7]Ibid., 106. *மனமாற்றத்திற்குப் பிந்திய நிலை என்ற விளக்கத்திற்கான மற்ற விவாதங்கள் வேதவசனப்பகுதியின் கலந்துரையாடலில் ஆழ்ந்து சிந்திக்கப்படும்.* [8]*சராசரி யூதர் அனேகமாக இவ்வகையான உள்ளான போராட்டத்தைக் கொண்டிருந்ததில்லை என்பதும் கவனிக்கப்பட வேண்டியதாக உள்ளது (ரோமர் 10:1-4ஐக் காணவும்).* [9]J. D. Thomas, *Romans,* The Living Word series (Austin, Tex.: Sweet Publishing Co., 1965), 51-52. [10]*உங்கள் உரையைக் கவனிப்பவர்கள் அடையாளம் கண்டுகொள்ளக்கூடிய ஒன்று அல்லது இரண்டு விவரிப்புகளைப் பயன்படுத்தவும்.*

[11]*இந்த விவரிப்பு* Jim Townsend, *Romans: Let Justice Roll* (Elgin, Ill.: David C. Cook Publishing Co., 1988), 53 *என்ற புத்தகத்தில் தரப்பட்டிருந்தது.* [12]Ron Howard, prod., *The Missing* (Santa Monica, Calif.: Revolution Studios, 2003). [13]Jimmy Allen, *Survey of Romans,* 4th ed., rev. (Searcy, Ark.: By the author, 1973), 72. [14]*சில பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள், இதற்குத் தொடர்புடைய sarkikos என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன, ஆனால் கையெழுத்துப் பிரதிரீதியான ஆதாரம் sarkinos என்ற வார்த்தைக்கே ஆதரவாக உள்ளது.* [15]C. G. Wilke and Wilibald Grimm, *A Greek-English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph Henry Thayer (Edinburgh: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1977), 569. [16]Townsend, 57.